JET2-3-TA

# எதிர்காலத்தை குறித்த பயத்தோடு மன அழுத்தத்தில் சோர்வோடு இருக்கும் போது தேவன் அளிக்கும் ஆறுதல் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:...**இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், பதினேழு வயது நிரம்பிய சுறுசுறுப்பான வாலிப பெண் குதிரை சவாரியை விரும்புபவள், ஹாக்கி நீச்சலும் பிடிக்கும், ஒருமுறை ஆற்றில் குதிக்கும்போது தனது தண்டுவடத்தை உடைத்துகொண்டாள். பலவித அறுவை சிகிச்சைகளுக்கு பிறகு தன்னால் நடக்கவும் தனது கரங்களை பயன்படுத்தவும் முடியாது என்பதை அறிந்தால், அவர் இனி தனது வாழ்நாள் முழுவதும் சக்கர நாற்காலியில் தான் இருக்கவேண்டும். கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளாக ஏமாற்றங்கள் மனஅழுத்தம் எதிர்காலத்தை பற்றிய பயத்திலிருந்து மீண்டு ஜெயமெடுக்க தேவன் ஜோனி எரிக்சன் டாடாவிற்கு எப்படி உதவினார்?

நாற்பது வயது நிரம்பிய மனிதர், கத்துக்கோப்பான உடல் நிலை, வாரத்தில் 3 முறை ராகெட் பந்து விளையாடுபவர், தனகென்று உடலிடை பயிற்சியாளரை உடையவர். எதிர்பாராதவிதமாக தனது பின் பகுதியில் வலியையும் வேதனையையும் உணர்ந்தார், அது அவரை வேதனைமிகுந்த அறுவை சிகிச்சைகளை எதிர்கொள்ள செய்தது

அவருடைய ஜீவனை காக்க மருத்துவர்கள் சில தண்டு வட அடுக்குகளை அகற்றி எழும்புகளை இணைத்தனர்.

இன்றைக்கு Dr. மைகேல் எஸ்லே, வேதாகம கழகத்தின் நிறுவனர் தலைவராக இருக்கிறார், மேலும் ஜோனி எரிக்சன் டாடா இருவரும் தங்களுடைய ஏமாற்றமான மன அழுத்தம் பயம் நிறைந்த சூழ்நிலையில் தேவன் எப்படி அவர்களுக்கு ஆறுதல் அளித்தார் என்பதை நம்மோடு பகிர்ந்துகொள்ள இருக்கிறார்கள். இந்த விசேஷித்த ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:**...நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் Dr. மைகேல் எஸ்லே மற்றும் ஜோனி எரிக்சன் டாடாவோடு பேசிகொண்டிருக்கிறோம். நாம் பாடுகள் உபத்திரங்கள் பற்றி பார்க்கிறோம் இதில் தேவன் நமக்கு எப்படி உதவுகிறார், சுகம் எப்படி உண்டாகிறது, உங்களுக்கு இருக்கும் சகல கேள்விகளை பற்றியும் பார்த்துவருகிறோம். உங்களில் அநேகம் பேர், இப்போதும் வீட்டில் உபத்திரவத்தோடு உட்கார்ந்துகொண்டு இருக்கிறீர்கள். இப்போதும் உங்களை பாதித்துகொண்டிருக்கிற பல காரியங்களை குறித்து இப்போது எடுத்து சொல்ல முடியும். ஆனா அதுல என்ன பலன், நீங்க எல்லாத்தையும் சகித்துகொண்டு இருக்கிறீர்கள். இருந்தாலும், இவர்களை போல தொடர்ந்து உங்களுக்கு வலி வேதனை

இருந்தா, தீராத வேதனை, வாட்டியெடுக்கும் வலி, அலற வைக்கும் வேதனை, அந்த வலி வந்துச்சுன்னா உலகமே ஒண்ணா சேர்ந்து இழுப்பது போல இருக்கும்.

நீங்க இன்னைக்கு எங்ககூட பகிந்திட விரும்புகிறது, ஏனன்னா இந்த சூழ்நிலை தொடர்ந்துகொண்டே தான் இருக்குது மாறுவதே இல்ல, எப்படி இதை சகிக்கிரீர்கள்? தேவன் உங்களுக்கு எந்த மாதிரி உதவுகிறார்? ஜோனி, நாற்பத்தி ஐந்து வருடங்களா இந்த சக்கர நாற்காலியில். அதோட, ஓரிரு வருடங்களுக்கு முன்பு, உங்களுக்கு மார்பக புற்றுநோய் உண்டானதும் அதற்காக கீமோ எடுத்து கொண்டதையும் கேள்விப்பட்டேன். அதோட சேர்ந்து, உங்களுடைய எலும்புவால், பகுதியில் பிளவும் வெடுப்பு உண்டாயிருந்தது, அதற்கான அறுவை சிகிச்சையில் உங்களுக்கு மயக்க மருந்துகூட கொடுக்கல. இப்ப உங்க சரீரம் முழுவதும் சொல்லமுடியாத வேதனை இருக்கிறது. அந்த புற்றுநோயை பற்றி சொல்லுங்களே, எப்படி தேவன் இந்த எல்லா காரியத்திலும் உதவினாருன்னு சொல்லமுடியுமா?

ஜோனி எரிக்சன் டாடா:...சரி, என்னுடைய மார்பக புற்றுநோய் 3வது நிலையில் கண்டறியப்பட்டது, என்னுடைய மார்பில் 3 இன்ச் கட்டி இருந்தது. நா மேச்டேக்டோமி மற்றும் கடுமையான கீமோதெரபி பெற வேண்டியிருந்தது அதினால் என்னுடைய சரீரம் அதிகமாக துவண்டுவிட்டது. என்னுடைய மெலிந்த எலும்புகள், துளைகள்

உண்டானது, வலி சொல்லமுடியாத அளவிற்கு அதிகரித்திருந்தது; மயக்கநிலை, பலவீனம், கண் இமைகள் கொட்ட ஆரம்பித்தது, கண் புருவங்கள், என்னோட முடி. ஒருநாள் என்னுடைய கணவர் என்னை கீமோ முடித்து வீட்டிற்கு கூட்டீட்டு போயிட்டு இருந்தார், அப்ப நாங்க இந்த பாடுகள் நரகத்தின் ஒரு சாரல் போல இருக்கிறது என்பதாக பேசிக்கொண்டிருந்தோம், சிறிய சாரல் போல, வா, அப்ப அது எப்படி இருக்கும்? அதாவது, விழிப்போட வைத்திடும். அப்பதா நாங்க யோசிக்க ஆரம்பித்தோம், சரி, பரலோகத்தின் சாரல் எப்படி பட்டதாக இருக்கும்? நரகத்தின் சாரல்கள் இமை மூடதபடி செய்யுமானால் தேவன் அனுமதிக்கிரவைகளும் நம்மை ஆவிக்குரிய நித்திரையை விட்டு விழித்தெழ வைக்கும் என்று யோசித்தோம், சரி, பரலோகத்தின் சாரல்கள் எப்படி இருக்கும்? நாங்க எங்க வீட்டிற்கு வண்டியில் வந்துகொண்டிருக்கும்போது ஒரு டிரைவ் வேல, கொஞ்சம் நேரம் நிறுத்தினோம், அப்ப நா, “உங்களுக்கு தெரியுமா கென், பரலோகத்தின் சாரல்களும் அந்த நாளில் எல்லா எப்படி பிரகாசமா எளிமையானதாக சவுகரியமா இருக்குன்னு எனக்கு தெரியாது. ஆனா என்னை பொறுத்தவரை பரலோகத்தின் சாரல் என்பது என்னுடைய இந்த நரகத்தில் இயேசுவை காண்பதுதான் என்றேன்.”

உங்களுடைய நரக வேதனைகள் மத்தியில் இயேசுவை பார்ப்பது எனபது உண்மையில் விளக்க முடியாத ஒரு அனுபவமாகும், ஏன்னா நம்பிக்கையோடு ஒவ்வொரு நாளும் என்னுடைய சிலுவையை

என்னால சுமக்க முடியுன்னு சொல்ல முடியாது, என்னுடைய சார்பில் இயேசு சுமந்த அந்த சிலுவையின் அனுபவத்தை நான் பெறவே இல்லையே. இதுல எந்த இனிமையும் இல்ல, எதுவமே திருப்தி படுத்த முடியாது புற்றுநோய், குவாட் ரிபிலேக், வலி, முதல்ல அவருடைய சிலுவையில் நீங்க இனிமையையும் திருப்தியும் அடையவேண்டியது அவசியமாக இருக்கிறதே. என்னுடைய வாழ்க்கை ஒரு பெரிய அட்டைபடங்கள் கொண்ட பாடம் என நினைக்கிறேன் பிலிப்பியர் 3: எட்டு முதல் பத்து வரை அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார், “நான் இயேசுவை அறிந்துகொள்ள வேண்டும்.” ஓ, ஆனா நா இயேசுவை அறிந்திடனும். அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை நான் தெரிந்துகொலனும். அதை எடுத்து வாரும், இயேசுவே. அவருடைய பாடுகளில் ஐக்கியப்படுவதை நான் தெரிந்துகொள்ள வேண்டும். சரியா?

அப்பதா என்னால அந்த உள்ளான வட்டத்திற்குள் வந்து அந்த ஐக்கியத்தை உணர்ந்து அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்தை அடையமுடியும். பின்கோ! என்னுடைய வாழ்க்கை இப்படிதான் இருக்கிறது. என்னுடைய செவிகளில் இயேசு ஒன்றை கூறினார், “உனக்கான எனது திட்டம் இதுதான், ஜோனி, நீ பாவத்திலிருந்து விடுபெறவேண்டும். நா உனக்கு வித்தியாசமான விதங்களில் உதவிட இருக்கிறேன். உன்னுடைய வேதனை உனது இருண்ட துணையாக இருந்திடும், ஆனா அதுவே உனது துணையாக இருக்கபோவது கிடையாது, அது இருளாக இருந்தாலும் பரவாயில்ல.” அதனால,

தினமும் நான் அவருடைய மரணத்தில் அவரோடு மரிப்பவளாக இருக்கிறேன். நா தினமும் என்னுடைய சிலுவையை சுமந்துகொண்டு அவர் சிலுவையில் மரித்த என்னுடைய பாவங்களுக்கு தினமும் மரிக்கிறேன். அவரை போல ஆகிறோம் என்பதற்கு இதுதான் சரியான அர்த்தம், அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்தை அடைகிறோம். கவலைகளுக்கு நான் மரிக்கிறேன். எதிர்காலத்தை குறித்த பயத்திற்கு நான் மரிக்கிறேன். என்னுடைய விதத்தில் தான் எல்லா நடக்கணும் என்கிற சுய எண்ணம் திருப்தியற்ற நிலைகளுக்கு மரிக்கிறேன். நான் மரிக்கிறேன், அதினால், இயேசு உன்னுடைய வாழ்வில் சிலவற்றை மாற்றிக்கொள்ளுகிறார், உன்னுடைய சமாதானம், உன்னுடைய மனரமியம், உன்னுடைய மகிழ்ச்சி, உன்னுடைய இனிமை, இரட்சகரின் நேசத்தின் சாராம்சம் முழுவதுமாக கிடைக்க பெறுவோம். இதுதான் என்னுடைய அன்றாட வாழ்வின் நிலையாக இருக்கிறது. மேலும் புற்று நோய் இன்னொருபடி தள்ளுகிறது, சிலுவைக்கு நேராக என்னை உந்தி தள்ளுவதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:**...உங்களுக்கு ஆச்சரியாமா இருந்துச்சா?

**டாடா:**...ஓ, உண்மையா. அதாவது, இதை எல்லாம் நானே யோசித்துக்கொண்டே என்று உங்களுடைய நேயர்கள் நினைத்திட கூடாது. நா வேடேரன் இல்ல. இதுல எனக்கு எந்த முன் அனுபவமும்

இல்லை. நா திடமான நபரும் கிடையாது. எல்லாரையும்விட நா ரொம்ப பெலவீனமானவள். ஆனா ஒன்று உறுதியாக தெரியும், நா காலையில் விழித்து எழும்பும்போது, எனக்கு இயேசுவின் தேவை அவசியமாக இருக்கிறது. ஒரு என்னிடம் ஒருநாள் சொன்னது நினைவிருக்கு, “ஓ, உங்களுக்கு தெரியுமா, உங்களை அவர் ரொம்ப நம்புகிறார் அதினால தான் இதை உங்களுக்கு அனுமதித்திருக்கிறார்.” நா சொன்னே, “இல்ல,இல்ல,இல்ல,இல்ல.” எதற்காக அனுமதித்தார் என்றால் நா இதுக்கு நம்பகமான ஆள் இல்லை என்பதினால் அனுமதித்திருக்கிறார் என்றேன். நா சக்கர நாற்காலியில் பொழுதை கழிக்க விரும்புகிற நல்ல மனுஷி கிடையாது. நினைவிருக்கட்டும், நா ஒரு அத்லெட். நா ஹாக்கி வீராங்கனை. நா மலை ஏருபவள், நா நீச்சல் அடிப்பவள், டென்னிஸ் விளையாடுவேன். நா ஒரு இடத்துல உட்காருகிற ஆள் கிடையாது. ஆனா ஒன்னு மட்டும் என்னை பற்றி எனக்கு நிச்சயமா தெரியும் நா நம்பிக்கையை நோக்கை ஓடிக்கொண்டு இருக்கிறேன், அதுதான் சிலுவையின் நிழல். அதனாலதான் ஒவ்வொருநாளும் இயேசுவின் பாதபடியில் இருக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:...**மைகேல், ஒவ்வொரு நாளும் தாங்க முடியாது வலி இருக்கிறது, எப்படி சமாளிக்கிறீங்க? நாளைக்கு இது மாறிடாது அடுத்த நாள் மாறாது என்பதை தெரிந்து உங்களால எப்படி தொடர்ந்து சமாளிக்க முடியுது. ஒவ்வொரு நாளும் அது மோசமாகிகிட்டே இருக்குது.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:**...நா நினைக்கிறேன்... ஜோனி சொன்னது போல, நா அதை வெற்றுரைகள்னு சொல்வேன், அப்படிதான் ஜனங்களுக்கு சொல்றாங்க. அதாவது, உங்ககிட்ட இருந்து நிறைய கற்றுகொண்டோம், இந்த விஷயத்தை தெரிஞ்சுகிட்டோம். சரி, இருக்கட்டும், நா இதை என்னோடு இருத்யத்துல பதிய வச்சிருக்கேன். இதைதான் எல்லா விதமான மக்களுக்கும் நா சொல்கிறேன். நா மிஞ்சின ஆவிக்குரியவன் இல்ல. ஒரு புரட்சியாளர் சொன்னது நினைவிருக்கிறது எப்படி செய்கிறீர்கள் என்பது முக்கியமால், உங்களால முடியாத சமயத்தில் எப்படி சிறப்பா செய்கிறீர்கள் என்பது தான் ரொம்ப முக்கியம். அது என்னுடைய வழக்கமாயிடுச்சுன்னு நினைக்கிறேன், அதாவது, இந்த காரியங்களில் ஜெபத்தோடு நம்பிக்கையும் பிறந்தது. அதுதான், எனக்கு முதல் காரியம், அப்பறம்தான் அடுத்தது. 30 வருடங்களாக ஒரு மேய்ப்பனாக இந்த ஆலோசனையை தான் நான் கொடுத்துவருகிறேன். உங்கள் துணைவர் மரிக்கும்போது, உங்க பிள்ளை மரிக்கும்போது, அந்த வேதனை எப்படி பட்டதாக இருந்தாலும் சரி, உங்களுடைய வேலையை செய்திடுவீன்கள். எனக்காக இதை செய்யணும் அத செய்யணுன்னு இருக்கும். காலையில படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது ஏதோ பெரிய டிரக் வந்து மோதுகிற மாதியான உணர்வு பலமுறை ஏற்பட்டிருக்கு. சுடுதண்ணீர் குளியல் அவசியமாக இருக்கும். பிறகு என்னுடைய மருந்துகளின் வேலை துவங்கிடும்.

அடுத்து, இரண்டாவது, என்னுடைய வீட்டின் அடித்தளத்திற்கு சென்று இதோடு போராடிகொண்டிருப்பேன் அரைமணிநேரம் அல்லது ஒரு மணிநேரம் வரை போகும், சிலசமயங்களில் அதற்கு மேலயிருக்கும். இங்கதான் என்னுடைய வாழ்க்கையை நான் கண்டுபிடித்தேன்.

அடுத்து, மூன்றாவதாக, மற்றவர்களுக்காக சில வேலைகளை செய்யவேண்டும். நா மைகேலின் வாழ்வில் இருக்கும் வலியையும் உபத்திரவத்தையும் மட்டுமே பார்த்துகொண்டிருக்க வேண்டுமானால், கசப்பு உண்டாகும், சோர்வு, பரிதாபமானவராக  தோன்றும். ஆனா நா இன்னொருத்தருக்கு எதையாவது செய்யும்படி முன்னேறி போகும்போது, அது எதுவானாலும் சரி, அதாவது, குடும்பத்தில் பிரட்சனையுள்ளவர்களுக்கு உதவுதல், என்னோடு குடும்பத்துக்கு உதவுதல், என்னுடைய மாணவி பிள்ளைகளுடன் அமர்ந்து அவர்களுடைய போராட்டங்களை, தெரிந்துகொள்ளுதல். என்னை பற்றியவை இருக்காது. “மாம்சத்தில் நான் வாழ்கிற இந்த வாழ்க்கை என்னை நேசித்து எனக்காக தமது ஜீவனையே கொடுத்த தேவ குமாரன் மேலுள்ள விசுவாசத்தில் வாழ்கிறேன். பாவத்திற்கு மரித்திருக்கிறேன். ஆனா நான் ஜீவனோடுதான் இருக்கிறேன். அதனால எனக்கும் சோதனைகளும் சுயநலமும் எழும்ப முயற்சிக்கும். எங்க சபையில் ஒரு ஆராதனை வீரர் அவருக்காக ஒரு பாடலை எழுதும் சிலாக்கியம் பெற்றேன், இதையெல்லாம் தள்ளி வச்சுட்டேன், “நம்முடைய பாடுகள் நாம் பெறப்போகிற நன்மைக்கு ஈடானவைகள்

அல்ல என்று சொன்னேன்.” நா முதல் மூன்று ஆய்வு கட்டங்களை கடக்கும்போது, ஜான், என்னால சொல்ல முடிந்தது, அதாவது, எனக்கு லாபமாக இருக்கப்போகிற காரியத்தோடு ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லை.

**டாடா:**...ஹாலேலூயா

**எஸ்லே:**...அது நமக்கு நம்பிக்கையை தருகிறது. திடநம்பிக்கையை தருகிறது.

உங்க இரண்டு பேரையும் விட மிக மோசமான நிலையில் இருக்கும் ஒரு பெண்மணியை குறித்து பேச விரும்புகிறேன். தனது நரம்பு மண்டலத்தில் பிரச்சனையோடு இருக்கிற ஒரு பெண்ணை பற்றிய கதை

**எஸ்லே:**...ஆமா, பார்பராக்கு MS வியாதி. அதை டிரைமையால்கியா தலைவி என்று சொல்வார்கள் என நினைக்கிறேன். MS பலவிதமான மாறுபட்ட விதங்களில் தன்னை வெளிப்படுத்துவதாக இருக்கும், இதுவந்து சொல்லமுடியாத தாங்க முடியாத தலைவலி. உண்மையில், அவங்களும் நானும் இந்த வார்த்தையும் ஒண்ணாதா தெரிந்துகொண்டோம், டார்ச்சர்” சிலுவையில் அறைவதற்கு சொல்லப்படுவது. அவங்களுக்கு அதே பாதையில்தான் இருந்தாங்க, மருந்துகளால அவங்க வலிகளுக்கு உதவ முடியல. அவங்க சொல்வாங்க, “இருண்ட குகையின் அடியில் மூன்று காரியங்கள்

எனக்கு இருக்கிறது: நா, தேவன், எனது வேதனை. அவங்க படுக்கையில்தான் இருந்தாங்க. தொடுவது, சத்தம், வெளிச்சம், எல்லாமே அவங்களுக்கு வேதனையை கொடுத்தது. அவங்கள குளியல் அறைக்கு தூக்கீட்டு போய்தான் குளிக்க வைக்கணும். இந்த நிகழ்ச்சிக்கு அவங்க பொருத்தமா இருப்பாங்க. அவங்க சிறிய ஆய்விற்கு பிறகு வெளியில் வரும்போது, நா அவங்களோடு பேசுவேன் அப்ப கேட்பேன், "பார்பரா, உங்களால எப்படி முடியுது? உங்களால எப்படி முடியுது? அதற்கு அவங்க சொல்வாங்க, நீங்க தனிமையா இருக்கும்போது நீங்க, தேவன் உங்க வலி, யாராலையும் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது. அப்ப நீங்க அவர் பக்கம் நெருங்கிடுவீங்க."

என்னுடைய நண்பன் ஜிம், இரண்டு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை , பெற்றவன் ஒரு இனிமையான இடம் இருக்கிறது என்று சொல்லுவான். கிறிஸ்துவை தவிர அங்க வேறு யாருமே கிடையாது. சரி, அங்க நீ திரும்ப போக விரும்புகிறாயா? இல்ல. ஆனா அங்க இருக்கும்போது, திரும்பி பார்க்க வேறு எந்த இடமும் இருக்காது. ஜோனி பேசுவதை கேட்கும்போதும், பார்பரா பேசுவதை கேட்கும்போதும், அவங்களுடைய பேசிச்சுனால நா பேச்சு அற்றவனாக அமையாக இருப்பேன். ஏன்னா எனக்கு அந்த அளவிற்கு முடியாது, ஜான். அதுதான் கிறிஸ்துவின் சரீரம், அவங்களுக்கு ஊழியம் செய்யப்படிகிறது, எப்படி இருந்தாலும் சரி, அவங்களுக்கு தெரியாத மக்களுக்கு உதவிட முயலுகிறார்கள். இதுதான் விசுவாச வாழ்க்கை.

என்னுடைய சூழ்நிலைகள் மாறாமல் இருக்கலாம், அப்படிப்பட்ட நிலையிலும் உண்மையாக இருக்க முயலுகிறேனா?

**ஆன்கர்பெர்க்:...**இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். திரும்ப வந்ததும் இரண்டு பேரும் சொல்ல இருப்பவைகளை கேட்டிடலாம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:...**ஆல்ரைட், மீண்டும் வருக. நாம இப்ப ஜோனி எரிக்சன் டாடாவோட பேசீட்டு இருக்கோம், நம்ம கூட Dr. மைகேல் எஸ்லேவும் இருக்கிறார். இந்த பகுதியில் நான் கேட்க விரும்புகிறது என்னன்னா, ஜோனி, நீங்க நாற்பத்தி ஐந்து வருடமா சக்கர நாற்காலியில் இருக்கீங்க. மைகேல், பல, ஆண்டுகளாக நீங்க தீராத வேதனையோடு இருக்கீங்க. உங்களுக்கு முன்னால இருக்கிற அந்த பயத்தை நீங்க எப்படி மேற்கொள்கிறீர்கள்? நீங்க இரண்டு பேருமே புத்திசாலியான மனிதர்கள். இது எங்க போயிட்டு இருக்குன்னு உங்களுக்கு தெரியும். கடைசியா உங்களுக்கு தான, ஜோனி, ஆப்ரேஷன் நடந்தது. உங்களுக்கும் அப்படிதானே, மைகேல். ஆனா இன்னும் தேவை படலாம். மாஎளும், நம்முடைய வாழ்க்கை முடிவுக்கு வந்துகொண்டு இருக்கிறது. உங்களுக்கு முன்னால இருக்கிற பயத்தை எப்படி கையாளுகிறீர்கள்? ஜோனி, நீங்க முதல்ல சொல்ல விரும்புறீங்களா?

**டாடா:**...நிச்சயமா இத நா சொல்லணும், இதனால என்ன நடக்கும் என்கிற பயம் இருக்கிறது. நா பயப்படலன்னு சொன்னா நா மனுஷியே இல்ல. அதனால, மைகேல் சொன்னது போல நானும் சில சமயங்களில் என்னுடைய இருதயத்தை அமைதியாக வைத்திட முயல்வேன். தேவனுக்கு முன்பாக குனிந்து நிற்பேன். அடுத்த காரியத்தை செய்ய முயல்வேன். இன்னும் கடுமையான சூழ்நிலையில் உதவி வேண்டி நிற்கிறவர்களை குறித்து யோசித்து பார்ப்பேன். அது உதவிடும். ஆனா நா பாடவும் செய்வேன். நா பிரயாணம் பண்ணும்போதும் பாடல்களை மனப்பாடம் செய்திடுவேன். கீர்த்தனைகளை மனப்பாடம் செய்ய முயலுவேன். மேலும், கீ, இந்த பிரயாணத்தில், “கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள், என் இதயமே, ஆத்துமாவும் சரீரமும் உங்கள் பாகத்தை பற்றிகொண்டிருங்கள். தேவனுக்கே சகல துதியும் மகிமையும் உண்டாவதாக.” தேவனுக்குள் மகிழ்ந்து களிகூர்ந்திடு, என் இதயமே, ஆத்துமாவே, ஒன்று இணைந்து செயல்பாடு. ஒன்றாக இசைந்திடு, பற்றிகொள். சரீரம், தேவனோடு இசைந்திட ஒப்புகோடு. ஆவியோடு இசைந்து நிறைக்க பழகிடு. இன்றைக்கு நீ செய்யவேண்டிய வேலை இருக்கிறது. உன்னுடைய அச்சத்தை அடக்கிகொள்.

எனக்கு நானே பேசிடுவேன். எனக்கு நானே பாடல் பாடி சந்தோஷப்படுவேன். நா சந்தோஷமா இருப்பதால பாடுகிறேன். நா விடுதலை பெற்றிருப்பதால் பாடுகிறேன். அவருடைய கண்கள்

புறாவின் மேல் இருக்கிறது. வேதம் சொல்கிறது எனக்கும் தெரியும், அவர் என்னை காண்கிறார்.” எனக்கு, நானே பாடிக்கொள்வது என் ஆத்துமாவுக்கு இனிமையாக இருக்கும், எனக்கு நானே வாசனைகளை சொல்லிகொள்வேன், உண்மை என்று எனக்கு தெரிந்த காரியங்களை நானே நினைபூட்டி கொள்வேன். எனக்கு முன்பாக என்ன இருக்கிறது என்று எனக்கு தெரியாது. நா சொன்னதுபோல, நா நேர்மையாக இருப்பேன், பயப்படமாட்டேன். ஆனா பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். நேரம் வரும்போது, அவருடைய அன்பு தேவை படும்போது, எனக்காக இருப்பார்.

**ஆன்கர்பெர்க்:**…மைகேல்

**எஸ்லே:**…அதாவது, என்னுடைய தாத்தா மாதிரி மரிக்க விரும்புகிறேன், தூக்கத்திலயே மரித்தார், கார்ல போறவங்க மாதிரி கூச்சல் போடல. (சிரிப்பு) பயம் அப்படிப்பட்ட ஒன்றுதான் என்று நினைக்கிறேன், சில நேரங்கள்ல அதை விவரிக்க முடியாது. முதல்ல ஒரு பைபாஸ் தேவை என்று கேட்டபோது; உங்களுக்கு புற்றுநோய் இருக்குன்னு கேள்வி படும்போது, உங்களுக்கு இன்னொரு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்ட போது, அது பெரிய விஷயமா இருந்துச்சு. ஒரு சுழற்சியின் பாதியில் இருக்கோம். ஆனா என்னை பொறுத்தவரை, ஜான், உண்மையை நாம நல்லா புரிஞ்சுக்கணும், அதாவது, நம்ம மனைவிய விட்டுட்டு போறோம்,

அதை விரும்பமாட்டோம். இன்னொரு கண்ணோட்டத்தில் பார்த்தோம் என்றால், இது அவர் எனக்கு கொடுத்திருக்கும் இன்னொரு நாள். இதுல நா உண்மையா இருப்பேனா?

என்னை பொறுத்தவரை, நம்முடைய இயலாமையின் வேலைகளில், எனக்கு புரியாத ஒரு காரியத்தை தேவன் செய்துகொண்டு இருக்கிறார். என்னுடைய தாகம் எல்லாம் வெற்றியடையணும் என்பதல்ல. உண்மையா இருக்கிறோமா என்பதுதான் அவசியம். இன்றைக்கு அவரை நான் துதிக்க விரும்புகிறேன். அதை துரிதமாக என்னால செய்ய முடியும். அதேமாதிரி கசந்திடவும் என்னால முடியும். ஆனா அந்த மூன்று நாட்களை நினைக்கும்போது, அதாவது, காலையில் வேதனையோடு எழும்பும் நாட்கள். அப்ப நா செய்கிற அடுத்த காரியம், அவரோடு நேரத்ததை செலவிடுவேன், அவரால் நடத்தப்படுவேன், இன்றைக்கு எனக்கு இருக்கும் நிலையோடு உமக்கு நான் எப்படி ஊழியம் செய்ய முடியும்? எதிர்காலத்தை குறித்த அதிக பயம் எனக்கு கிடையாது. அதை பற்றிய கவலை என்னை வதைக்காது.

**டாடா:**...ஒன்று பேதுரு 4:19, “தேவனுடைய சித்தத்தின்படி பாடு அனுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய், “இரண்டு காரியங்கள் செய்யணும்: முதலாவதாக, “சிருஷ்டிகருக்கு உங்களை ஒப்புகொடுக்க வேண்டும்.” அதாவது தேவனை நம்பவேண்டும். இரண்டாவதாக, “தொடர்ந்து நன்மை செய்யணும்.” அதாவது தேவனுக்கு கீழ்படியனும்.

“நம்பனும் கீழ்படியனும், வேறு எந்த வழியும் இல்லை. சந்தோஷமாக இருக்கனும். நீங்க பாடுகள் மத்தியில் இருக்கும்போது அவரை நம்பி அவருக்கு கீழ்படியனும். எல்லாவற்றிற்கும் காரணத்தை புரிந்துகொள்ள வேண்டும் என்கிற அவசியமில்லை. அதெல்லாம் நித்தியத்தின் மறுபக்கத்தில் பார்த்து கொள்ளலாம். எந்த வித அர்த்தத்தையும் கொடுக்காத மற்ற இருண்ட பிணைக்கப்பட்ட சுழற்சிகள் பின்னிபினையப்பட்ட  வலைகள் அப்போது பார்த்துக்கொள்ளப்படும். அர்த்தமற்ற உபத்திரவமாக நமக்கு தோன்றுகிற எல்லாவிதமான காரியங்களுக்கான திறவுகோலை நமக்கு கொடுத்திடுவார். அந்த நாள் வரைக்கும், அவரை நம்பி கீழ்படிந்து பதில்களை அவரிடத்தில் விட்டுவிடலாமே.

**ஆன்கர்பெர்க்:...**மைகேல், கர்த்தராகிய இயேசுவை தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொள்ளாத எத்தனையோ ஜனங்கள் இருக்கிறார்கள். அவரை பற்றி தெரியும். ஆனா நீங்க பேசுகிற இந்த அனுபவங்களை பற்றி அவர்களுக்கு தெரியாது.

**எஸ்லே:...** நம்மில் பலர் வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் இந்த வார்த்தையை பெரும்விதமான பிரச்சனையின் பாதையை அடைவோம், பவுல் எபேசியர் 2:8,9ல் கூறுகிறார், “கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு, கிரியைகளினால் உண்டானது

அல்ல. மனுஷனால் மேன்மை பாராட்டாதபடிக்கு உண்டாயிற்று.”
அதற்கு என்ன காரணம் இருந்தாலும் சரி, இந்த வார்த்தை என்னுடைய உலகத்தை அசைத்தது. ஏன்னா நான் வாழ்கிற மார்க்கத்தின் அமைப்பில் செய்யகூடியது செய்யகூடாது என்று இருக்கிறது. இந்த காரியங்களை நா செய்யாவிட்டாலும் இவற்றை நான் செய்தாலும் மட்டுமே எனக்கு பரலோகம் செல்ல வாய்ப்பு கிடைக்கும் என்கிறது. ஆனா அதுல நிச்சயம் இல்ல. தேவனை பற்றி புரிந்துகொள்ள வேண்டும், அவருடைய தயவினால், நமக்கு கிருபை அளித்திருக்கிறார், கோபாக்கினைக்கு பாத்திரரான நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெரிதான தயவு. விசுவாசத்தினால், சரியான நம்பிக்கையினால், எனக்கு என்னால் செய்துகொள்ள முடியாததை அவர் எனக்கு செய்திடுவார் என நம்புகிறேன். அவர் அற்புதமாக நித்திய ஜீவன் என்கிறதான ஈவை அளித்திருக்கிறார். என்னை நேசிக்கிற ஜீவனுள்ள தேவன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதை அறிவேன், என்னை காக்கிறார், இன்றைக்கு நாம் பேசுவதை கேட்கிற அனைவரையும் நேசிக்கிறார், இதை பார்த்துகொண்டிருக்கிறவர்களையும், அவர் நேசிக்கிறார். அவருடைய ஒரே பேரான குமாரனை அவர், “ஒரேபேரானவரை” நமக்காக அனுப்பினார்.

அடிக்கடி நான் ஜனகளுக்காக மரிக்கவும் தயார் என்பேன். சின்டிகாக மரிப்பேன். என்னால முடியுன்னு நினைப்பேன். என் மனைவிக்காக மரிக்கலாம். என்னுடைய பிள்ளைகளுக்காக நான் மரிக்கலாம். இதுல

எந்த விவாதங்களும் இருக்க முடியாது. ஆனா உங்களுக்கு தெரியுமா, ஜான், நா உங்களை எவ்வளவு நேசித்தா, ஜோனி யகூட, நா அதிகமா நேசித்தேனா, என்னுடைய பிள்ளைகளை உங்களுக்காக விட்டு குடுக்க மாட்டேன், இல்ல என்னோட பிள்ளைகளுக்காக உங்களை விட்டு குடுக்கவும் மாட்டேன். ஆனா கிறிஸ்து அதைதான் செய்தார். அவர் தேவனுடைய குமாரன். தேவன் அவருக்கு தமது ஜீவனை அளித்திருந்தார். அவருடைய ஒரேபேரானவர். அன்பிற்கு இதைவிட பெரிய விளக்கம் தேவையில்லை. இதை கேட்டுக்கொண்டும் பார்த்துகொண்டும் இருக்கிறவர்களை அவர் அவ்வளவாய் நேசிக்கிறார். இன்றைக்கு அதை நீங்கள் நம்ப வேண்டும், அவரில் உங்களுடைய நம்பிக்கை விசுவாசம் அனைத்தையும் வைத்திடுங்கள்... அது உங்களை நம்பிக்கைக்கு நேராக நடத்திடும். நம்முடைய நம்பிக்கைக்கு மேலான நம்பிக்கை. எல்லாருமே கல்லறைக்கு நோக்கி போகிறோம். யாருமே என்றென்றும் உயிரோடு இருக்கபோவது இல்லை. அப்ப நீங்க எங்க இருக்க விரும்புறீங்க? இதை கேட்டுகொண்டிருக்கும் நமது நண்பர்கள் தங்கள் விசுவாசத்தை தேவன் மீது வைக்கும்படி ஊக்குவிக்கிறோம், கிறிஸ்துவை மட்டும் உங்கள், இரட்சிப்பிற்காக விசுவாசியுங்கள்.

**ஆன்கர்பெர்க்:...**ஜோனி, சில சமயங்கள்ள, நீங்க சொல்றத கேட்கும்போது, நா ஏற்கனவே பரலோகம் போயிட்டு வந்தமாதிரி இருக்கும் ஏன்னா நீங்க இப்பவே அடுத்த பக்கத்தின் வாழ்க்கையை அனுபத்து வருகிறீர்கள் என்று நினைக்கிறேன். தேவன் நமக்கு

கொடுத்திருக்கும் அந்த நம்பிக்கை ரொம்பவும் அருமையான ஒன்று, இல்லையா. இந்த செய்தி தொடரை நாம் முடிக்க போகிறோம். எதிர்காலத்தை குறித்து உங்களுக்கு இருக்கும் நம்பிக்கையை பற்றி சொல்லுங்க.

**டாடா:**…நா பரலோகத்தின்  பிரஜையாக இருக்கிறேன். நா வாழ்வது, சாப்பிடுவது, சுவாசிப்பது, நம்புவது அதுதான். எனக்கு நித்தியத்தை குறித்த அசையாத நம்பிக்கை இருக்கிறது. இயேசு, என் மகிமையின் நம்பிக்கை. எல்லாவற்றிற்கும் மேலான நம்பிக்கை என் இருதயத்தில் பொங்குகிறது நான் அவரை நம்புகிறேன் அவருக்கு கீல்படிகிறேன். உண்மையாக, உடனடியாக, ஒரு தேவையோடு ஒரு பெண் எங்கள் அலுவலகத்தை தொடர்பு கொண்டது எனக்கு நினைவிருக்கிறது. அவளுடைய கணவர், ஒரு மேய்ப்பர், ஒரு வருடத்திற்கு முன்பு பைக் விபத்தில் தனது கழுத்தை உடைத்துகொண்டார். அவருடைய மேய்ப்பர் ஊழியத்தை அவர் இழந்துவிட்டார், பயங்கரமான மன அழுத்தம், படுக்கை அறைக்குள்ளே தன்னை பூட்டி கொண்டிருந்தார், படிக்கையில், லைட் எல்லாத்தையும் அனைத்திடுவார், ஏசிய ஆண் பண்ணிகொள்வார், நிழலை வரைந்திடுவார், இருட்டாகவே வைத்துகொண்டார். யாரும் உள்ள வர்றதா விரும்பல என்றார்.

என்னால அவரோட போன்ல பேச முடியுமான்னு கேட்டாங்க. அவங்க போனுடைய ரிசீவர அவருடைய காதுகிட்ட குடுத்தாங்க, அவரிடத்தில்

பேச எவ்வளவோ முயற்சி செய்து பார்த்துட்டேன். அவர் ஒரு பாஸ்டர். மைகேல் சொன்ன எல்லாம் அவருக்கும் தெரியும். இருந்தாலும், அவருக்காக பாடினதும், அவரோடு சேர்ந்து ஜெபித்தேன், வேதத்தின் எல்லா வசனங்களையும் எடுத்து சொல்ல முயன்றேன்: ஒன்னுமே சரியா வரல. அப்பறமா அவரிடம் சொன்னேன், “ரான் நீங்க எப்போதாவது தி சாஸ்வான்க் மீட்பு என்ற படத்தை பார்த்திருக்கிறீர்களா? அடுத்த பக்கத்தில் ஒரு சிரிப்பை நான் கேட்டேன். நான் சொன்னேன், “சரி, அந்த படத்தில் வருகிற வரி உங்களுக்கு நினைவிருக்குதா ஆண்டி டுபிரன்ஸ் அவருடைய சிறையில் புல் தரையில் படுத்துகொண்டு சொல்லுவார், என்ன சொல்வாருன்னா, “நம்பிக்கை என்பது நல்ல விஷயம், அதுதான் சிறந்த விஷயம் கூட. நல்ல விஷயங்கள் எப்போதுமே சாகாது என்பார்.” நா ரானிடம் சொன்னேன், “சுமார் 15000 அல்லது, சுமார் 20,000 மற்ற குவாட்ரிபிலேக் மக்கள் உங்கள மாதிரி என்ன மாதிரி இருக்காங்க, அவங்க இன்றைக்கு காலையில் எழுந்திருப்பாங்களா இல்லையன்றது அவங்களுக்கே தெரியாம இருக்காங்க. ரான், நீங்க வாழ்றதுக்கு தீவிரமா இருக்கணும் இல்ல சாவில் தீவிரம் காட்டவேண்டும் என்றேன். நீங்க இன்றைக்கு வாழ்வதில் தீவிரமடைய என்னோடு இனைகிறீர்களா என்றேன்.

உங்களுக்கு என்ன ஆச்சுன்னு தெரியுமா, கதையை சுருக்கமாக சொல்லுகிறேன், எங்களுடைய ஊழியத்தில் நடந்த குடும்ப ரெட்ரீட் நிகழ்ச்சியில் அவரும் கலந்துகொண்டார். இந்த மனிதன் திரும்பவும்

தன்னை பாஸ்டராக நிலைபடுத்தினார். ஒரு மாதத்திற்கு முன்பாக மரித்துவிட்டார், ஆனா நா அவரிடம் பேசினபோது, நம்பிக்கை என்பது விலையேறபெற்ற ஈவு என்பதை உணர்ந்தேன். இன்றைக்கு இதை பார்த்துகொண்டிருக்கிற நம்முடைய நேயர்கள் இந்த நம்பிக்கையின் தேவனை தழுவிட வேண்டும், இரக்கமும், ஆறுதலும், கிருபையும், நிறைந்தவர் நமக்கான பதிலை தமது கரத்தில் ஏந்தி நிற்ப்பவர். அவருடைய கரத்தை பிடித்துகொள்ளுங்கள், அதுவே போதும். அதுவே போதுமானது. எல்லாவற்றிற்கும் பதில் தெரியாமல் இருக்கலாம், ஆனா அந்த தழுவுதல் இருந்தால் போதும், அவருடைய கரத்தை பிடித்திடுங்கள், அது போதும்.

**ஆன்கர்பெர்க்:...**நீங்க இரண்டு பேரும் சொன்ன எல்லா விஷயங்களையும் கேட்ட என்னுடைய நேயர்கள் உங்க இரண்டுபேருக்கும் ஒரு பெரிய நன்றி சொல்லி உங்களை வாழ்த்த விரும்புவார்கள். ஒரு சிலர் மட்டுமே, அல்லது அப்படியே யாருமே இல்லாம இருக்கலாம், நீங்க அவங்க கிட்ட பேசறமாதிரி யாருமே பேசமாட்டாங்க. தேவன் உங்களை பயன்படுத்தியிருக்கிறார், நான் நம்புகிறேன், உங்களுடைய கேள்விகளுக்கு பதிலளித்து அவர்களை ஊக்குவித்து உதவியிருக்கிறீர்கள் அநேகர் பயனடைந்திருப்பார்கள். உங்க இடத்தில் இருந்து இங்க வரைக்கும் வர எடுத்து கொண்ட பிரயாசத்திற்காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன், இந்த ஆறு நிகழ்சிகளை கொடுக்கும்படி பிரயாசப்பட்டிருக்கிறீர்கள். தேன்க் யூ,

தேன்க் யூ, தேன்க் யூ. உங்களை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். நாங்கள் தொடர்ந்து உங்களுக்காக ஜெபித்திடுவோம்.

**டாடா:**...நிச்சயமாக.

**ஆன்கர்பெர்க்:...**நேயர்களே, இன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொண்டமைக்கு நன்றி. அடுத்த வாரம் தவறாமல் நிகழ்ச்சியை பாருங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2013 A.T.R.I.